நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.
நாள் 25/08/2023

## சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023**ம் வருடம் **ஆகஸ்ட்** மாதம் **31 ம்** தேதி **வியாழன் கிழமை** **காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண் 9192/2022/SBM நாள் 21.08.2023 ன் படி, தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மைக்காக, விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு புதியதாக ஒரு கழிவு நீர் வாகனம் (Cesspool Tanker) கொள்முதல் செய்துக்கொள்ள கீழ்க்கண்ட விவரப்படியான நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

| | | | மதிப்பீடு தொகை ரூ. | மத்திய அரசு மான்யம் ரூ. | மாநில அரசு மான்யம் ரூ | நகராட்சி பங்குத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| புதிய கழிவு நீர் வாகனம் (Cesspool Tanker) | 6 KLD | 1 எண்ணம் | 43.25 இலட்சம் | 21.63 இலட்சம் | 16.27 இலட்சம் | 7.35 இலட்சம் |

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவின் படி தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன்கீழ் மேற்கண்ட விவரப்படி புதிய கழிவு நீர் வாகனம் (Cesspool Tanker) கொள்முதல் செய்யவும், அதற்காக ஒதுக்கப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ.7.35 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 318 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் ஆய்வு கூட்டம் நாள் 16.08.2023 மற்றும் 19.08.2023 ல், நகர் பகுதிகளில் விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (Animal Birth Controll Centre) அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின் படி, இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கோட்டைவிளைப்பட்டி சாலையில் உள்ள நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் புதியதாக மேற்கண்ட விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (Animal Birth Controll Centre) அமைக்கும் பொருட்டு, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 19.00 இலட்சதிற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படி, விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (Animal Birth Controll Centre) அமைக்கும் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 19.00 இலட்சத்திற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 319 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

தமிழ்நாடு அரசு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 திருத்தங்கள் மற்றும் புதிய பிரிவுகளில் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 தொடர்பான பயிலரங்கம்

சம்மந்தமாக 22.6.2023 அன்று அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கில் வைத்து நடத்தப்பட்ட கூட்டத்திற்கு வாடகை, மேடை அலங்காரம் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டதற்கான செலவுத் தொகையில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.5000/– ஐந்தாயிரம் மட்டும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ICICI வங்கி சாந்தோம் கிளை கணக்கு எண் 343201000090 IFSC CODE No. ICICI0003432 என்ற எண்ணிற்கு ECS மூலம் செலுத்தக் கோரி வரப்பெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் கடிதம் ந.க.எண். 2563/2023/அ3 நாள் 22.8.23 மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 320 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண்.4</u>

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தகுதியான நபர்களை தேர்வு செய்ய 05.08.2023 முதல் 16.08.2023 வரை நடைபெறும் இடங்களில் தற்காலிக பந்தல், குடிநீர் வசதி, காத்திருக்கும் அறைகள், கழிப்பிட வசதி (தண்ணீர் வசதியுடன்) மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் சாய்தளம்(Ramp) சக்கர நாற்காலி மற்றும் சேர் வசதி மின்சார வசதிகள்போன்ற வசதிகள் தற்காலிகமாக அமைப்பதற்கு கீழ்க்கண்டவாறு 27.07.2023ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | கிருஷ்ணா வாடகை பாத்திர கடை | பிரின்ஸ் பந்தல், மெயின் ரோடு. சிவந்திபுரம் | ஸ்ரீ பந்தல், மெயின்ரோடு விக்கிரமசிங்கபுரம் |
|---|---|---|---|
| சாமியான பந்தல் நாள் ஒன்றுக்கு | 3500 | 3000 | 2800 |
| சேர் 50 க்கு நாள் ஒன்றுக்கு | 600 | 350 | 200 |
| பேன் 1 க்கு (நாள் ஒன்றுக்கு | 300 | 300 | 250 |
| டேபிள்1 க்கு (நாள் ஒன்றுக்கு | 300 | 200 | 80 |
| தண்ணீர் 1 கேன் | 120 | 105 | 100 |
| வண்டி வாடகை | 500 | 450 | 300 |
| | **5320** | **4405** | **3730** |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் ஸ்ரீ பந்தல், மெயின்ரோடு விக்கிரமசிங்கபுரம் அவர்கள் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 321 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண்.5</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் 25.08.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைமையில் துவங்க உள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி வழங்க அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் அடிப்படையில் நகராட்சி பள்ளிகளில் உள்ள 1 முதல் 5 ம் வகுப்பு பயிலும் பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி உண்ணும் பொருட்டு தட்டுகள் மற்றும் நீர்க்குவளைகள் வாங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.அதன் படி 200 தட்டுகள் மற்றும் நீர்குவளைகள் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு,

<u>அலுவலக குறிப்பு</u>

தமிழக அரசின் சிறப்பு திட்டம் என்பதால், பணியின் அவசியம் மற்றும் அவசரம்கருதி உடன் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 322 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதி 2023–24 கீழ் , கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளுக்கு 23.08.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 11 மருதம் நகர் முதல் சிவஞானபுரம் தெருவிற்கு செல்லும் பகுதியில் சிதிலமடைந்த பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைத்தல்<br>மதிப்பீடு ரூ. 16.00 இலட்சம்<br>ந.க.எண் 478/2023/இ1 | திரு. மாடசாமி<br>ஒப்பந்தக்காரர்,<br>திருநெல்வேலி | 0.15%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திரு. பொன்மலர்<br>ஒப்பந்தக்காரர்,<br>திருநெல்வேலி | 0.02%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. மாடசாமி , திருநெல்வேலி. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழுங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 323 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதி 2023–24 கீழ் , கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளுக்கு 23.08.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 20 மீனாட்சிபுரம் பகுதியில் கோடை மேலழகியான் கால்வாயில் படித்துறை அமைத்தல்<br>மதிப்பீடு ரூ. 10.00 இலட்சம்<br>ந.க.எண் 478/2023/இ1 | திரு. மாடசாமி<br>ஒப்பந்தக்காரர்,<br>திருநெல்வேலி | 0.030%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திரு. பொன்மலர்<br>ஒப்பந்தக்காரர்,<br>திருநெல்வேலி | 0.93%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. மாடசாமி, திருநெல்வேலி. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழுங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 324 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதி 2023–24 கீழ் , கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளுக்கு 23.08.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 15 | திரு. மாடசாமி | 0.01% |

| | | | |
|---|---|---|---|
| | எஸ்ஆர் வி நகர் சாலையில் கோடைமேலழகியான் கால்வாயில் தடுப்பு சுவர் அமைத்தல்<br>மதிப்பீடு ரூ. 10.00 இலட்சம்<br>ந.க.எண் 478/2023/இ1 | ஒப்பந்தக்காரர்,<br>திருநெல்வேலி | மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. பொன்மலர்<br>ஒப்பந்தக்காரர்,<br>திருநெல்வேலி | 0.27%<br>மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. மாடசாமி, திருநெல்வேலி. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 325 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதி 2023–24 கீழ் , கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளுக்கு 23.08.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 12 பொதிகையடியில் கோடை மேலழகியான் கால்வாயில் படித்துறை அமைத்தல்<br>மதிப்பீடு ரூ. 10.00 இலட்சம்<br>ந.க.எண் 478/2023/இ1 | திரு. கே.இராஜா<br>ஒப்பந்தக்காரர்,<br>விக்கிரமசிங்கபுரம் | 0.030%<br>மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு.முருகன்<br>ஒப்பந்தக்காரர்,<br>திருநெல்வேலி | 0.93%<br>மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.இராஜா , விக்கிரமசிங்கபுரம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 326 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் 2006 முதல் 2013 முடிய உள்ள காலங்களுக்கான நிலஅளவை பணியாளர்களுக்கு நிலஅளவை கட்டணம் மற்றும் ஓய்வூதிய பங்குத்தொகையாக ரூ 1,27,160/–ம் உரிய அரசு தலைப்பு கணக்கில் செலுத்திடக்கோரி உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மாவட்ட நிலஅளவை அலுவலகம், திருநெல்வேலி அவர்களிடமிருந்து ந.க.எண் ஆ2/1240/23(1), நாள் 22.05.2023ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே கீழ்கண்ட பட்டியலின்படி ரூ 1,27,160/–ம் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து நூற்று அறுபது மட்டும்) அரசு கணக்கில் செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வருடம் | நிலஅளவை கட்டணம் | ஓய்வூதிய பங்குத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 2006-2007 | 9933 | 4046 | 13979 |
| 2007-2008 | 10472 | 4276 | 14748 |
| 2008-2009 | 11370 | 4657 | 16027 |
| 2009-2010 | 12536 | 5154 | 17690 |
| 2010-2011 | 13973 | 5765 | 19738 |
| 2011-2012 | 15230 | 6299 | 21529 |
| 2012-2013 | 16577 | 6872 | 23449 |

ந. க. எண் 720 / 2023/சி1

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 327 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் ஆடு, மாடுகளை பிடித்து கோசாலையில் ஒப்படைக்கப்படுவதோடு, அதற்கான அபராத கட்டணம் மட்டும் வசூல் செய்திட இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 20 நாள் 30.03.2022 ன் படி அனுமதிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இனி வரும் காலங்களில் சாலையில் சுற்றித் திரியும் ஆடு மற்றும் மாடுகளை பிடித்து, நகராட்சி மூலம் பொது ஏலம் விடப்பட்டு, ஏலத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் வரவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்கண்ட மாடுகளை பிடிப்பதற்கு வெளியாட்களை பணியமர்த்தவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சி பகுதிகளில் சுற்றிதிரியும் மாடுகளை பிடிக்க, மாடு பிடிப்பதற்கென உள்ள பணியாட்களைகொண்டு பிடித்தம் செய்திடவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்திடவும் , மேலும் பிடிக்கப்பட்ட மாடுகளை ஏலம் விட்டு, அத்தொகையினை நகராட்சி நிதிக்கு வரவாக்கம் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்,

**தீர்மான எண் : 328 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன்து.மேலும் வடகிழக்கு பருவமழை தொடங்க இருப்பதாலும், காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வது அவசியமாக உள்ளது. அதன் பொருட்டு இந்நகர் பகுதிகளில் அனைத்து இடங்களிலும் கொசுமருந்து அடிக்க வேண்டி, 200 லிட்டர் அபேட் மற்றும் 200 லிட்டர் பைரேதிரம் மருந்தும் கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவேண்டியும், மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி, மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 329 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.13**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக உள்ள ஜென்செட் வைக்கப்பட்டுள்ள அறையின் மேற்கூரை மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளது,. இதனால் அவ்வறையில் வைக்கப்பட்டுள்ள ஜென்செட் பழுதடைய அதிக வாய்புள்ளதால், மேற்கண்ட சிதிலமடைந்த மேற்கூரையினை மாற்றம் செய்ய வேண்டி, நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் கருதி, நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.40 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 330 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.14**

அரசாணை நிலை எண் 10 நாள் 28.01.2023 ன் படி, இந்நகராட்சிக்கு புதியதாக நகராட்சி பொறியாளர்,மற்றும் இதர பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இந்நகராட்சிக்கென தனியே நகராட்சி பொறியாளர் , உதவியாளர் மற்றும் இதர பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி பணியாளர் மற்றும் இதர பணியாளர்களுக்கு டேபிள், சேர் மற்றும் பிளாஸ்டிக் சேர் அகியவைகள் புதியதாக காதி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

1, டேபிள் (4x2 சன்மைக்கா ஸ்டீல் டேபிள்) 1எண்ணம் – 14250

2. எஸ் டைப் சேர் 4 எண்ணம்(4250x3) – 17000

3. பிளாஸ்டிக் சேர் 15 எண்ணம் (800X15) – 12000

**அலுவலகக்குறிப்பு**

அலுவலக உபயோகத்திற்காக காதி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட பொருட்களுக்குரிய செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 331 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.15</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள UPS மற்றும் பேட்டரி கள் பழுதடைந்துள்ளதால், மின்சார தடையின் போது அலுவலகத்தில் உள்ள கணினிகள் உடன் செயல் இழந்துவிடுவதால், அலுவலக பணி பாதிப்படைவதுடன், கணிணிகளும் பழுதாகும் நிலை உள்ளதால், எனவே மேற்கண்ட UPS மற்றும் பேட்டரிகளை அகற்றி புதிய பேட்டரிகள் பொருத்தும் பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.295000/– மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 332 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஒம்/–**

**திரு.எஸ்.பி,எம்,செல்வசுரேஷ்பெருமாள்**
**நகர்மன்றத் தலைவர்**
**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி**